


# அமரர் அப்பச்சி வல்லிபுரம்

## 31.07.2019

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும்
திருநகர் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு . அப்பச்சி வல்லிபுரம்

அவர்களின் சிவபதப்பேறு
குறித்த 31ஆம் நாள்
"அமரகாவியம்"
31.07.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

விழுதுகள் ஆள் ஆன போது
விழுந்து விட்ட ஆலமரம்
எங்கள் குடும்பத் தலைவர்
எம்மை இவ் உலகத்திற்குத் தந்து
அன்பு பண்பு பாசம் கலை எனும்
நான்கையும் அமுதமாய்
ஊட்டி வளர்த்த அன்புத்தெய்வம்
இன்று எம்மோடு இல்லை.
ஆதவனும் ஆகாயமும்
கடலும் சந்திரனும் என்றும்
நிலைத்திருப்பது போல்
நின் புகழும் நிலைத்திருக்க
உம் கருவுதித்த காணிக்கையாய்
"அமரகாவியம்" எனும் இம்மலரை
தாங்கள் திருவடிக் கமலங்களுக்கு
கண்ணீர்ப் பூக்களாய் காணிக்கை
செலுத்துகின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

மண் மகிழ

09

10

1941

கண் நெகிழ

01

07

2019



# அமரர் திரு .அப்பச்சி வல்லிபுரம்
## ( கலைஞர் , கலாபூசணம்)

மண்ணில் விளைந்த முத்துக்கு நிகராகி
மக்கள் மனங்களில் இடம் பிடித்த
நல்ல உள்ளம் கொண்ட அப்பாவே..!
உம் மீளாத் துயில் செய்தி கேட்டு
அதிர்ந்து போனது எம் இதயங்கள்
ஆறுதல் சொல்வதற்கு வார்த்தைகள்
இல்லாமல்–நாமும்
ஆறாத்துயரில் தவிக்கிறோம்.
நீங்கள் மறைந்து போனாலும்–உங்கள்
நினைவுகள் மறைந்து போகாது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோத்திரப்பாடல்கள்

*திருச்சிற்றம்பலம்*

## விநாயகர்துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

வேயுறு தோளி பங்கன் விடை முண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம் நல்ல பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல
அடியவர்க்கு மிகவே



## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுந்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பேல்

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகனாங்கி
யிரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

நீரிழிவு குட்ட மீளை வாதமொடு பித்த மூல
நீள்குளிர் வெதுப்பு வேறு ...... முளநோய்கள்
நேருறு புழுக்கள் கூடு நான்முக னெடுத்த வீடு
நீடிய விரத்த மூளை ...... தசைதோல்சீ
பாரிய நவத்து வார நாறுமு மலத்தி லாறு
பாய்பிணி யியற்று பாவை ...... நரிநாய்பேய்
பாறோடு கழுக்கள் கூகை தாமிவை புசிப்ப தான
பாழுட லெடுத்து வீணி ...... லுழல்வேனோ
நாரணி யறத்தி னாரி ஆறுச மயத்தி பூத
நாயக ரிடத்து காமி ...... மகமாயி
நாடக நடத்தி கோல நீலவ ருணத்தி வேத
நாயகி யுமைச்சி நீலி ...... திரிசூலி
வாரணி முலைச்சி ஞான பூரணி கலைச்சி நாக
வாணுத லளித்த வீர ...... மயிலோனே
மாடம தில்முத்து மேடை கோபுர மணத்த சோலை
வாகுள குறட்டி மேவு ...... பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 09 | 01 |
| 10 | 07 |
| 1941 | 2019 |

# அமரர்
# அப்பச்சி வல்லிபுரம்
## எங்கள் அன்புத் தெய்வத்தின் வாழ்க்கை வரலாறு....

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

இந்துமா கடலிடை இலங்கைத் தீவாம்
ஈழவள நாட்டின் வடபால் ஆங்கே
யாழ்மா நகரில் பெருமாள் கோவிலடி என்னும்
வாழ்விற் குகந்தோர் வளம்நிறை ஊரில்

கற்றவர் போற்றும் நற்குடி மரபில்
அப்பச்சி என்னும் அன்புடை யாளர்
நற்பண் புகளுடை அன்ன பூரணத்தை
நல்மணம் புரிந்தே நன்றாய் வாழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகை யானதோர் இனியநல் வாழ்வில்
இன்ப மென்றாலது பிள்ளை களென்றோ
ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து ஒன்றில்
புரட்டாதி மாதம் பத்தாம் – நாளில்

இப்புவி தன்னில் முதல் பிள்ளையாய்
மண்ணிற் பிறந்தாரிம் மாண்புறு மனிதர்
வல்லி புரமெனும் தனிநாமம் கொண்டு
தாய்தந்தை போற்றிடத் தரணியில் வாழ்ந்தார்.

இளமையிற் கல்வியை இனிதே கற்றிட
முத்துத்தம்பி வித்தியாசாலைய தேகியே
கல்வியும் பண்பும் கண்ணிய வாழ்வும்
கலைகளின் ஞானமும் இலக்கிய அறிவும்

ஆங்கே ஒருங்கிடை அவர்கை கூடிட
அதுவே பெருஞ்சிறப் பாகியே வாழ்ந்தார்
பாங்காய் கலைகளில் பாண்டித் தியங்களும்
பாராட்டும் சிறப்பும் பெற்று மகிழ்ந்தார்.

சினிமா கொட்டகையில் கலைக் காவலனாய்
அர்ப்பணிப்பு சேவை புரிந்து குடும்ப
வாழ்வின் செல்வங்கள் எல்லாம் பெற்றிட
வாழ்வாங்கு வையகத்தில் வாழ்ந்திடு நாளில்

பொன்னம் பலமெனும் சீரிய லாளனின்
சீரிய மனைவியாள் நங்கை பெற்ற
பரமேஸ்வரி என்னும் கன்னிகை யாளை
கடிமணம் புரிந்தே இல்வாழ்வு கண்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பும் காதலும் ஆருயிர் வாழ்வும்
என்னும் நிலைத்திட்ட இல்லறம் தன்னில்
கண்களாய் போற்ற கண்மணி நால்வர்
கடவுள் கொடுத்த வரமென அமைந்தார்

முதல் முத்தென எழில் புத்திரனாய்
பிறேம் குமார் என்னும் பிறேம் கிடைக்கவே
எண்ணத்தில் மகிழ்ந்தே எதிர்காலம் சிறக்க
வண்ணக் கனவுகள் கண்டு மகிழ்ந்தார்

பெற்றோர் மனங்களும் பெருமிதம் கொள்ள
உற்றநல் கல்வி கலைகளும் கடமையும்
கற்றே சிறப்புற்று வாழ்வியல் ஒழுக்கம்
வகையுடன் இணைந்த மனிதருள் மணியாய் விளங்கினார்.

ஞானம் என்னுமோர் கன்னிகை யாளை
கல்யாண பந்தம் கொண்டிடு வாழ்வில்
ஜோயேல் ஜெகூடன் பிலிப்சன் அட்சயா
என்கின்ற பிள்ளைகளுடனே மனநிறைவடைந்தார்.

கலைகளின் உணர்வில் முகிழ்ந்த முத்தாக
அடுத்ததாய் புத்திரி கலைச்செல்வி
அன்பொடு அணைத்து ஆளாக்கி வளர்த்து
கல்வியும் கலைகளும் வாழ்வியலும் போதித்தார்

ரவீந்திரன் என்னும் நல் மணாளனோடு
சந்தோச வாழ்வில் விபிசானந்தன் , பபிசாயினி ,
விபிசன் என்னும் இன்மகவு கிடைக்கவே
இனியநல் பேரனும் பேத்தியும் பெற்று மகிழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வத்தின் அம்சமாய் திருமகள் கடாட்சமாய்
பெண்ணது பிறந்திட கலைவாணி என்னும்
நல்நாம மிட்டு சந்தோசம் பொங்கிட
இல்வாழ்வின் மகிழ்ச்சியில் இன்புற்று வாழ்ந்தார்.

கதிர்காமலிங்கம் என்கின்ற நல்மண மகனை
திருமணம் புரிந்தே பிரான்ஸ் மாநகரில்
ஜெனித்தா, திலக்சன் அழகிய குழந்தைகள்
அன்போடு வாழ்வதை எண்ணி மகிழ்ந்தார்.

இளையவன் கலைவாணன் என்னும் இன்னொரு மகனாய்
பிறந்ததை எண்ணி மகிழ்வெய்த வந்திட
இளமையில் கல்விகள் கற்றிடும் வேளை
இனங்களின் யுத்தம் அவன் இருப்பிடம் மறைத்தது.

வாழும் வகையறிந்து வாழ்ந்தபெரு வள்ளல்
ஆளும் குரல்வளத்தால் பேரெடுத்த கலைஞன்
நாளும் சமூகத்திற் சேவை செய்யும் தொண்டன்
நாடறிந்த வகையினிலே நல்லதொரு மனிதன்

சிந்துநடைக் கூத்தைக் காத்திட்ட பிரம்மா
காத்தான் வல்லிபுரமென உலகறிந்த மனிதர்
முத்துமாரி புகழ்பாடும் அம்மனின் பக்தன்
காலத்தால் மறையாத காவிய நாயகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்து உலகை வென்றிட்ட கலைஞன்
மெல்லிசைக் குரலால் மெய்சிலிர்க்கும் பக்தன்
கலாசார பேரவை முதியோர் சம்மேளனம்
ஆகியவற்றிலே மக்களின் தோழன்

கூடிய குடும்பம் குதூகல மாகவே
கோவிலைப் போலவே வாழ்ந்திடு நாளில்
பேரிடி யாகவே தாரத்தை இழந்தார்
பாதி உயிர் தொலைத்தார் மௌனமானார்

நோயென்று சொல்லியோர் காவொன்று வந்தது
நொந்திங்கு அழுதிட நேரமும் வந்தது
சாவென்ற செய்தியில் சகலமும் இழந்தது
சடுதியில் எங்களின் சந்தோசம் போனது

விழிகளைத்திறந்துவைத்து விதியோடு போராடு
அல்லும் பகலும் அயராது அருகிருந்து
காத்து நின்றென்ன.... காலன் வென்றுவிட்டானே!
காப்பாற்ற முடியலையே! கதிறயழ வைத்தானே!

ஒன்று ஆனி பத்தொன் பதுவில்
பகலவன் மெல்லவே உதித்த பொழுதில்
அதிகமாய் நேசித்த அன்புடைத் தந்தையின்
ஆவியைப் பிரித்திட ஆண்டவன் நினைத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா என்றழைத்த பிள்ளைமுகம் பார்க்கவில்லை
ஐயோ என்றலறும் உறவுமுகம் நோக்கவில்லை
உற்றார் சொந்தங்கள் உடன்பிறந்த சகோதரர்கள்?
ஊரே திரண்டிருக்க உயிர்பிரிந்த தேனையோ

பாதிநாள் வாழ்வதிலே பாடைக்கு அவசரமேன்?
பிள்ளைகளும் வம்சமும் பரிதவிக்க விட்டது ஏன்?
காதிற்கு கேட்கவில்லை கடவுளிற்கு கண்மணிகள்
காப்பாற்ற வேண்டிநின்று கதறிநின்ற கூக்குரல்கள்

இப்புவி யேகி இல்லறம் கண்டே
இறப்பதும் பிறப்பதும் இயல்பது வாமே
எத்துணை மாந்தரும் என்றோ வோர்நாள்
இறப்பதே இயற்கையின் நியதிய தாகும்.

ஆண்டவன் அடியில் அமரத்துவம் காண
ஆங்கே வேளை வந்தது காண்பீர்
ஆத்மா சாந்தி பெறவும் வேண்டி
அஞ்சலிப் போமே இருகை கூப்பி

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**- குடும்பத்தினர் -**

**ஆயிரம் சொந்தங்கள் அணைத்திட இருந்தாலும்
அப்பா உம்மைப்போன்று அன்பு செய்ய யாரும் இல்லை இவ் உலகில்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள் பேரன்பில்.....

பேரன்பு மிக்க எம் பெருங்கடவுள் எம்தந்தை
பேரிடையை ஏன் தந்தீர் பாதியிலே போவதற்கு?
ஆரத்தழுவி யெமை அணைத்த கைகள் எங்கப்பா?
ஆரெமக்கு விதித்தாரோ ஆருயிரை இழந்துவிட

காப்பாற்றி விடத்தானே கடைசிவரை போராடி
காத்திருந்து கண்விழித்தோம் காலன்வென்று விட்டானே!
பூப்போன்ற உன்முகத்தை புகைநடுவில் எரியவிட்டு
புகைப்படமாய் பார்க்கின்ற விதியதுவை யார் வரைந்தார்?

பண்பூட்டி எமை வளர்த்த பாசமதை அனுபவிக்க
பலதூரம் கடந்து வந்தேன் பாடையிலே பார்ப்பதற்கா?
கண்மூடித் திறப்பதற்குள் கனவாகிப் போனீரே!
கடைசிவரை நினைத்திருப்போம் கணமேதும் மறவாமல்.

## மைத்துன மைத்துனிமார் , மருங்களில்.....

குன்றாகி எங்களது
குடும்பங்கள் விளங்கி நிற்க
என்றும் துணை நின்றீர்
எங்களிலே ஒருவராய்
அன்றாடம் நாம் கண்ட
அழகுமுகம் அழிந்ததுவோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் உள்ளத்தில்....

மடியிருத்தி அருகழைத்து மழலைமொழி யது கேட்டு
மகிழ்ந்தெம்மை சீராட்டி வளர்த்தெடுத்தீர் பெற்றோர் போல
நொடியதுவில் வந்தசெய்தி நொந்தழுது நிற்கின்றோம்
நூறாண்டு கடந்தாலும் மறவாது நினைத்தழுவோம்

மாமா என்றழைத்தோம் மக்களைப் போல் நேசித்தீர்
மனங்கோணா தொருநாளும் மகிழ்வொடு பழகிவந்தீர்
ஆறாத துன்பத்தை அவனியிலே தந்துவிட்டு
ஆர்கூட்டிப் போனாரோ எம்கண்ணை கட்டிவிட்டு

# பேரப்பிள்ளைகள் துன்பத்தோடு...

பிஞ்சுக் குழந்தைகள் நாம் உங்கள்
நெஞ்சிற் தவழ்ந் திருந்து நெடுநாட்கள்
கொஞ்சிக் கதைபேச
குடுத்துவைத்த திவ்வளவோ?
வஞ்சக் கடவுளவன்
வாழக்கையதைக் குறைத்துவிட்டான்
வாறீரோ மீண்டுமிங்கு
நாம் வளர்ந்து விட்டபின் நாளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டப்பிள்ளைகள்

வாழையடி வாழையாய் வந்துதித்தோம்
உம்மரபில் பிறந்ததற்கு பெருமகிழ்வு அடைகிறோம்
கலைக்கு கோமகனாய்
காவியத்தில் தலைவனாய்
ஓவியத்தில் உருவமாய்
வரலாற்றில் பொக்கிசமாய்
நீர் புகழப்பட நாம் பெற்ற பாக்கியமே ....
நாம் உம் புகழுடன் வரலாற்றில்
வாழப்போகும் பாக்கியம்.

## சகோதரர்கள் துன்பத்தில்

உடன்பிறந்த பிறப்பாகி உறவுதனில் நிலையாகி
ஒற்றுமையாய் நாம். வாழ்ந்த உயர்வாழ்வு சரிந்ததுவோ?
அடங்காத துன்பத்தை அவனியிலே தந்துவிட்டு
ஆண்டவன் தான் விதித் தானோ ஐயா நீ போவதற்கு?

# தேற்றம்

ஜனனமும் மரணமும் உலகத்தின் நியதி,
வருவதும் போவதும் காலத்தின் சுழற்சி,
மனதினில் பொள்வதே மனிதர்க்கு மீட்சி
மாறாததிவ் உண்மையே மாண்புறு நிதர்சனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



திருநகர் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய தலைவர்

அமரர்

## அப்பச்சி வல்லிபுரம்

(கலைஞர், கலாபூசணம்.)

இல: 165, திருநகர் வடக்கு, கிளிநொச்சி.

மலர்வு: 09-10-1941 உதிர்வு: 01-07-2019

அழியாத ஓவியமாய், அணையாத தீபமாய் நீங்கள் வாழ்ந்த காலத்தில்
வாழ்வின் தத்துவங்களை புரிய வைத்தீர்கள்...இந்தப் பூமியின் அழகில் நீங்களும் ஒரு தனியழகு
உங்கள் நினைவுகள் எப்போதும் எங்கள் உள்ளங்களில் அணையா நெருப்பாய்
உங்கள் புன்னகை துளிர் விட்டுத் தளிர்களாய் எங்கள் இதயங்களில் தளைத்துக் கொண்டே இருக்கும்.

ஆலய நிர்வாகத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரகாவியம்

## வல்லிபுரத்தானின் கலைத்துறைப் பதிவுகள்

### மரபுக்கலை "மாமணி"

### முத்துமாரி பக்தன்

### காத்தான் வல்லிபுரம்

"ஓரானைக் கண்ணே கண்ணே
உமையாள் பெற்ற பாலகனே"

## கரை எழில் விருதும் கௌரவமும்

பிரதேச செயலகம் கரைச்சி - 2011

பிறந்ததிகதி 10.09.1941

முகவரி : திருநகர் வடக்கு , கிளிநொச்சி

பிறந்த இடம் : பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்

சம்பந்தப்பட்ட துறை கூத்து

துறை அனுபவம் - ஐம்பது வருடாங்களுக்கு மேல்

யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் 1956ஆம் ஆண்டு முதல் கிளிநொச்சியில் வசித்து வருகிறார். இவரது தகப்பனார் பாரம் பரியக் கூத்துக்களை மட்டுவில் அம்மன் கோயிலில் மேடையேற்றி வருவார். அதில் சிறு சிறு பாத்திரங்களில் நடித்திருக்கிறார். அதன் பின்னர் இவரது காணியில் இருக்கும் அம்மன் ஆலயத்தில் உடுக்கு அடித்து காத்தவராயன்கூத்தினை மேடையேற்றி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்களின் பாரம்பரிய கூத்துவடிவங்கள் காலப்போக்கில் பின் தங்கியிருக்க அதை இளைய தலைமுறையினருக்கு கற்றுக்கொடுத்து புத்துயிர் வழங்கவேண்டுமென்ற விருப்பில் இன்றுவரை பல பாடசாலைகளில் கூத்தினை மாணவர்களுக்கு கற்றுக்கொடுத்து வருகின்றார். ஆரம்ப காலத்தில் முத்துமாரி அம்மன் நாடகமன்றம் என்ற மன்றத்தினை உருவாக்கி அதனூடாக கிளிநொச்சி மாவட்டத்தில் 300 தடவைகளுக்கு மேல் காத்தவராயன் கூத்தினை மேடையேற்றியுள்ளார். கலைப் பாராம்பரியம் தொடரவேண்டுமென்ற நோக்கில் தனது பணியினை செய்து வருகின்றார்.

**தொடர்ந்து காத்தவாராயன் கூத்தினை பாடசாலை மாணவர்களுக்கு பயிற்றுவித்து வரும் இவருடைய இந்த சேவைக்காக கரைச்சிப் பிரதேச செயலகம் கரை எழில் விருது வழங்கி கௌரவிக்கின்றது.**

**கரைச்சி முன்னால் பிரதேச செயலாளர்**
**கோ.நாகேஸ்வரன் வழங்கிய கருத்து:**

கலைஞர் கலாபூஷணம் வல்லிபுரம் அவர்கள் இவரது காலப்பகுதிகளில் கலை கலாசாரத்தை பேணுவதிலும் தமிழ்மொழியின் செயற்பாடுகளும் பாரம்பரிய கலாசாரம் மருவி வருகின்றமையால் பாடசாலை மற்றும் மன்றங்களின் ஊடாக மீளக்கொண்டு வருவதற்காக தன் பிரதேசம் மட்டுமல்லாது யாழ்.மாவட்டத்திலும் பல்வேறு பிரதேசங்களிலும் தனது கூத்துக்கலையை செய்து வருவது உண்மையிலேயே பெருமைக்குரியதாகும்.

மருவிய இக்கூத்தை எமது பிரதேசத்திலும் பாடசாலை மாணவர் ஊடாகவும் கலைஞர்கள் ஊடாகவும் வளர்த்து வருகின்றமை பழம்பெரும் கலைஞர் விருது மட்டுமல்லாது பல்வேறு விருதை வென்றதுடன் 1995ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு திருநகர் முத்துமாரி அம்மன் நாடக மன்றத்தை உருவாக்கி பல கலைஞர்களால் அரங்கப் பிரவேசமும் கண்டுள்ளார்.

**கிருஸ்ணபிள்ளை விக்னராஜா அதிபர், கிளி / கிளிநொச்சி இந்துக்கல்லூரி :** வல்லிபுரம் அவர்கள் தமிழர்களின் பாரம்பரிய கூத்தை அழியாது இந்துக்கல்லூரி மாணவர்களுக்கு கற்பித்து மாகாண மட்ட ரீதியிலே பல பரிசில்களை பெற்றுத்தந்துள்ளார். அது மட்டுமல்லாது ஏனைய பாடசாலைகளுக்கு தனது கூத்துக்கலையை பழக்குவதும், அழிந்துவரும் கலையை அடுத்த சந்ததிக்கு கூறும் ஒருவர் ஆவார். இவரது கலை ஆர்வத்தை மாணவர்களூடாகக் கண்டு கொள்வதில் இப்பாடசாலை பெருமை கொள்கின்றது.

## 02. "கலைக்கிளி "2011 பண்பாட்டுப் பேரவை கிளிநொச்சி அப்பச்சி வல்லிபுரம்

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட இல 165, திருநகர் வடக்கு என்னும் கிராமத்தில் வாழ்ந்து வரும் இவர் 1941.09.10 ஆம் நாள் யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியில் பிறந்தவர். தனது தந்தையாரிடம் பாரம்பரியமாக காத்தவராயன் சிந்துநடைக் கூத்தினை சிறுவயதிலிருந்து பயின்று இன்று கிளிநொச்சி மாவட்டத்தில் இக்கலைத்துறையில் தலைசிறந்த அண்ணாவியாரக இன்றும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தொழிலாக அன்று கலைச்சேவையாக பாடசாலை மாணவர்களுக்குப் பயிற்றுவிப்பதும், ஆலயங்கள் தோறும் அரங்கேற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இவரது 50 வருடகால கலைச்சேவையைப் பாராட்டி **கிளிநொச்சி பண்பாட்டுப் பேரவை 2011ஆம் ஆண்டுக்கான கலைக்கிளி விருது வழங்கிக் கௌரவிக்கின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கு.ரஜீபன் முன்னாள் கலாசார உத்தியோகத்தர் :

அப்பச்சி வல்லிபுரம் அவர்கள் பாடசாலை மாணவர் மத்தியில் சிந்து நடைக்கூத்தினை அறிமுகப்படுத்தும் நோக்கில் பாடசாலை தோறும் இக்கலையை பயிற்றுவித்து வருகிறார். தனது 75 ஆவது வயதிலேயே தனது மூப்பினை பொருட்படுத்தாது கலை படைப்புக்களையும் கலை ஆர்வலர்களையும் உருவாக்குவதில் அக்கறை செலுத்திவருகின்றார். எந்த நிகழ்வானாலும் முதலில் சமூகமளிப்பவராகவும் , இறுதியாகச் செல்பவராகவும் கிளிநொச்சியில் வாழும் முதுபெரும் கலைஞர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றார். இன்றைக்கு இருக்கின்ற அழிந்து போகும் கலைகளில் சிந்துநடைக் கூத்தை அழிய விடாது கிட்டத்தட்ட முப்பது வருடங்களுக்கு மேலாக அழியவிடாது பேணிப்பாதுகாத்து வருகின்ற கலைஞர் என பெருமை கொள்ளக்கூடியவர்.

## கஜேந்திரன் ரெஜினோல்ட் அபிவிருத்தி உத்தியோகத்தர் :

தமிழ் சமூகத்தின் தொன்மைக்காலத்தை நோக்கின் பிரதானமான பொழுது போக்கு அம்சங்களில் கூத்தும் , இசை நாடகமும் தனித் தன்மை பெற்றுள்ளன. காத்தவராயன் போன்ற சமூக கூத்தமைப்பினை இன்றைய கூத்தறிஞர்கள் உயிர் துடிப்புடன் இக்கலையை கற்றுக்கொள்வதற்கு துணையானவர்கள் அண்ணாவியார்களே! அடுத்த சந்ததியினருக்கு இக்கலையை பாரம்பரியமாக கடத்துவதற்கு வல்லிபுரம் அவர்கள் பெரிதும் முயற்சி செய்துள்ளார். 75 வயதிலும் விருப்பத்துடன் கலையினைப் புகட்டுவது கிளிநொச்சி மண்ணின் கலைஞர் என்ற வகையில் பெருமைக்குரியது.

## முதலமைச்சர் விருது

அப்பச்சி வல்லிபுரம்

1941.09.10 இல் யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் 1956ஆம் ஆண்டு முதல் கிளிநொச்சி வசித்து வருகின்றார். தனது தந்தையாரின் வழிகாட்டலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய கூத்துக்களில் நடிக்கத் தொடங்கிய இவர் தனது காணியில் இருக்கும் அம்மன் ஆலயத்தில் உடுக்கு அடித்து காத்தவராயன் பாடல்களை பாடி வருவதோடு வருடா வருடம் காத்தவராயன்கூத்தை மேடை ஏற்றியும் வருகின்றார்.

முத்துமாரி அம்மன் நாடக மன்றத்தை கிளிநொச்சியில் நிறுவி 300 இற்கு மேற்பட்ட தடவைகள் காத்தவராயன் சிந்துநடைக் கூத்தினை பாடசாலை மாணவர்கள் கலைமன்றங்களின் ஊடாகவும் மேடையேற்றி வந்துள்ளார்.

**இவரது கலைச்சேவையைப் பாராட்டி கௌரவ முதலமைச்சர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் பெருமையடைகின்றது.**

**சிவ எழுமலைப்பிள்ளை மலையாளபுரம் :**

ஈழநாட்டிலே கலைகள் யாவராலும் போற்றி வளர்க்கப்பட்டன. அண்ணாவிமார்கள் மேடையேற்றங்களையே பெரிதும் விரும்பி செயற்பட்டனர். ஆனால் இன்று அழிந்து வரும் காத்தவராயன் கூத்தை கிளிநொச்சி மாவட்டத்தில் காத்து வருபவர் அப்பச்சி வல்லிபுரம் அவர்கள். இவர் கூத்தில் கையாளும் வழிமுறைகள் மிகச் சிறந்தவையாகும். பாடல், இறைவடிவம், ஆடல் முறை, உடை, அலங்காரம் போன்றவற்றை எக்காலத்திலும் அவர் லாவகமாகக் கையாண்டு வருகின்றார். 17ஆம் , 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் வளர்ந்த கலைகளுள் காத்தவராயன்கூத்து முன்னோடியாகும். இதுவே இன்று ஒரு மணித்தியாலயம் அரை மணித்தியாலங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டு சிந்து நடைக்கூத்தாக பாடசாலை, ஆலயம், கலைநிகழ்வு என பல்வேறு இடங்களில் மேடையேற்றப்படுகின்றது. 1970இல் இருந்து இக் கூத்துக் கலைக்காக வல்லிபுரம் அவர்கள் தன்னை அர்ப்பணித்துள்ளார். அதுமட்டுமன்றி ஒப்பனைக் கலைஞராக , நடிகனாக, அண்ணாவியாராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்பட்டு சேவை மனப்பான்மை கொண்டவராக திகழ்கின்றார். இவர் காத்தவராயன் கூத்தின் பாதுகாவலராவார். தள்ளாத வயதிலும் தளராத கலைஞன் என்பதில் இவர் பெருமிதம் அடைவதுண்டு.....

**மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லம்:** இவரது தன்னலமற்ற தொண்டுகளிற்காகவும் பங்களிப்பிற்காகவும் பல விருதுகள் வழங்கிக் கௌரவித்தமையும் இவரது கலைத்துவச் சேவைகளை நன்குணர்த்தி நிற்கின்றது. 2007 கலாபூஷணமும் , 2011, கரைஎழில், கலைக்கிளியும் 2014 கௌரவ முதலமைச்சர் விருதும் மட்டுமல்லாமல் 100இற்கு மேற்பட்ட கௌரவிப்புக்களும் , பாராட்டுக்களும் பெற்றுள்ள இவர் கலையுலகில் சாதனையாளர் என்பது பெருமைக்குரியது.

**கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கம்:**

வல்லிபுரம் அவர்கள் கிளிநொச்சி திருநகரைப் பெருமைப்படுத்தும் வகையில் 50 ஆண்டு காலமாக கூத்து கலை வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்து வருகின்றார். மாணவர்கள் , இளைஞர்களைப் பயிற்றுவித்து காத்தவராயன் சிந்துநடைக்கூத்துகளில் முதல் இடத்தைப் பெற்றுக்கொடுத்துள்ளார். **"இவரின் கலைப்பணியைப் பாராட்டி 2006ஆம் ஆண்டு தமிழ்ச்சங்கத்தால் "தமிழ்எழில்" விருது வழங்கப்பட்டது."** இவர் பிரதேசத்திலும் , மாவட்டத்திலும் , மாகாணத்திலும் நன்மதிப்பை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**தாரகை நாடக மன்றம் திருநகர்:**

கலைஞர் அப்பச்சி வல்லிபுரம் யாழ் மண்ணிலே பிறந்தும் கிளிநொச்சி மண்ணிற்கே பெருமை சேர்த்தவராவார். இவர் பல விருதுகளைப் பெற்றிருப்பது மட்டுமல்லாமல் யுத்த காலத்திலும் யுத்தத்திற்கு முன்னரும் பல விருதுகளைப் பெற்ற காலத்தை வென்ற கலைஞர் கற்பனைக்கும் எட்டாத எங்கள் அற்புத கலைஞன் அப்பச்சி வல்லிபுரம் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சியில் வடமோடி தென்மோடி போன்ற இரட்டிப்புக் தாளத்தில் பண்ணிசை தவறாமல் சொல் பிசகாமல் சுதி விலகாமல் பாடக்கூடிய வித்தக கலைஞர் ஆவார். கூத்து அழகியல் கலையை வருங்கால சந்ததியினரின் சிந்தைக்கு விருந்தாக்கி சிறப்புடன் பழக்கி பல பாலகர்களை கூத்துக் கலையில் அரங்கேற்றிய சிற்பி, கலைப்பண்டிதர், கலாபூஷணம் வல்லிபுரம் அவர்கள். இந்த வரலாற்றை தமிழர்கள் அறிந்துகொண்டு அடுத்து சந்ததியினரிடம் எடுத்துச்செல்ல வல்லிபுரம் போன்ற பெட்டகத்திலிருந்து அள்ளியெடுக்கும் கருவூலங்களே எதிர்கால சந்ததியினரின் மரபுக் கலையாகும் என்று பகிரங்கமாக பறை சாற்றுவோம்.

**அப்பச்சி வல்லிபுரம் அவர்களின் விருதுகள், கௌரவிப்புக்கள், பாராட்டுக்கள் (போருக்கு முன்னர் )**

முதுகலைஞர்<br>
கலைவேந்தன் } ஈழத்து வானொலி

## போர்க்காலம்

மரபுக் கலைஞர் - வானோசை

தமிழ் எழில் - தமிழ்ச்சங்கம்

கலாபூஷணம் - கலாசார திணைக்களம்

## 2010 இற்குப் பின்னர்

கரை எழில்

கலைக்கிளி

கௌரவ முதலமைச்சர் விருது

## கௌரவிப்புக்கள் மற்றும் பாராட்டுக்கள்

பிரதேச செயலகம், கரைச்சி

மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

பாரதி வித்தியாலயம் -பாரதிபுரம்,கிளிநொச்சி

இந்துக்கல்லூரி - கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பக முத்துமாரியம்மன் ஆலயம் - மலையாளபுரம்,கிளிநொச்சி.
பொதுமக்கள் பாதுகாப்புச் சபை மற்றும் பல நிறுவனங்கள்

**காத்தவராயன் சிந்துநடைக் கூத்துக் கலைமாமணி அப்பச்சி வல்லிபுரம் அவர்களின் கூத்துக் கலைப்பணி பார்வை....**

**ஆய்வாளரின் உறுதிமொழி :** யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக நடனத்துறையின் நுண்கலை மாணிப் பட்டத்திற்கான இறுதியாண்டு மாணவி செல்வி ஷாயனா கிருபாகரன் அவர்களால் .... கிளிநொச்சி மாவட்ட முதுபெரும் கலைஞர் அப்பச்சி வல்லிபுரம் அவர்களின் கூத்துக் கலைப்பணி ஓர் பார்வை என்ற நூல் வல்லிபுரம் ஐயாவிற்கு சூட்டிய மகுடம்.

கரைச்சிப் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் மற்றும் கலாசார உத்தியோகத்தர் கு.ரஜீபனால் உருவாக்கப்பட்டு இந்திக் கலைஞரை ஆசிரியராக் கொண்ட திரைப்படக்கல்லூரியின் மாணவர்களால் திரு.அப்பச்சி வல்லிபுரம் அவர்களைப் பற்றிய விவரணப்படம், நேர்காணல்கள், அவருக்கு கொடுக்கப்பட்ட செங்கோல்

கரைச்சிப் பிரதேச செயலர், மற்றும் கலாசார உத்தியோகத்தர், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர்கள் தற்போது அவருக்கு வழங்கிய மதிப்பு, கௌரவிப்பு, பண்பாட்டுத் திணைக்களத்தின் உதவிகள் வல்லிபுரம் ஐயாவுக்கு வழங்கிய வாழ்நாள் மகத்துவம். மற்றும் கலைஞர்களின் நேர்காணல்கள் மரபுக் கலைஞர் வல்லிபுரம் அவர்களின் இறந்தும் இறவாத அவரின் மகத்துவத்திற்கான மணி மகுடம்.

**இது வாழ்நாள் சாதனையாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'காத்தவராயன்' சிந்துநடைக்கூத்து






காத்தவராயன் சிந்துநடைக் கூத்து நிகழ்வின் போது...










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்



தொல்லையிரும் பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க !
இமைப்பொழுது மென்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க !
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க !
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க !
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க !
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க !
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க !
கரங்குவிவா ருண்மகிழும் கோன்கழல்கள் வெல்க !
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க !
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விழுங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்

பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம ளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம் பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவமென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் செல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.



திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயே முத்துமாரி

தாயே என் தாயே முத்துமாரி
எம்மை காப்பாயே காப்பாயே முத்துமாரி
ஆத்தாளே ஆத்தாளே முத்துமாரி – இந்த
அண்டமெல்லாம் பூத்தாளே முத்துமாரி (தாயே)

உத்தமியே பத்தினியே முத்துமாரி அம்மா
சக்தியடி சக்தியடி முத்துமாரி
அந்தரியே சுந்தரியே முத்துமாரி எம்மை
ஆதரிக்கும் கைகளம்மா முத்துமாரி

செக்கச் செவந்த கல்லு முத்துமாரி – உந்தன்
மூக்குத்தியில் மின்னுதடி முத்துமாரி
சொக்கனுக்கு பக்கத்திலே முத்துமாரி – நீ
சொக்கி நிற்கும் காட்சி கண்டோம் முத்துமாரி (தாயே)

வேப்பிலையில் ஆடைகட்டி முத்துமாரி அம்மா
வேண்டுதலை தீர்க்க வந்தோம் முத்துமாரி
பூமிதிச்சு தீ மிதித்து முத்துமாரி
உந்தன் பூவடியைத் தேடி வந்தோம் முத்துமாரி

தேரெடுத்து வந்தோமம்மா முத்துமாரி – எம்மை
ஏரெடுத்து பார்த்திடம்மா முத்துமாரி
பாட்டெடுத்து வந்தோமம்மா முத்துமாரி –எங்க
பாவமெல்லாம் தீர்த்திடம்மா முத்துமாரி (தாயே)

பொன்னாரம் பூவாரம் முத்துமாரி
உனக்கு பூவாடை கட்டி வந்தோம் முத்துமாரி
தேவாரத் தாலாட்டு முத்துமாரி உனக்கு
தெம்மாங்கு பாட்டுமா முத்துமாரி

பொன்னாத்தா பூவாத்தா முத்துமாரி உந்தன்
கண் பார்த்த மாசத்தில் மூணுமாரி
என் ஆத்தா என் ஆத்தா முத்துமாரி வந்தால்
என்ன ஆத்தா என்ன ஆத்தா முத்துமாரி (தாயே)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருட்சம் ஒன்று வீழ்ந்ததுவோ..!

திருநகர் முத்துமாரியம்மன் கலாமன்றத்தின் ஸ்தாபகர் அமரர் திரு.அப்பச்சி வல்லிபுரம் அவர்கள் இயற்கையெய்திய செய்தி எம் காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி உருக்கியதைப் போல வேதனை தருகின்றது. எம் இனத்தின் கலையையும், பண்பாடுகளையும், வழக்காறுகளையும் பேணி அடுத்த சந்ததிக்கு கொடுக்க வேண்டும் எனும் பேரவாவோடு தன்னுடைய கலாமன்றைத்தை நிறுவி அதன்வழி பெரும் தொண்டாற்றிய பெருமகனார் கிளிநொச்சி மண்ணின் மகத்தான மனிதர் இவர் என்பதே என் முடிவு.

அன்னார் தம் கலைச்சேவையின் அரும்பேறுகளாய்

**கரை எழில் - 2011,** **கலைமாமணி - 2015,**

**கலைக்கிளி - 2011,** **முதலமைச்சர் விருது - 2014**

ஆகிய சிறப்புமிகு விருதுகளையெல்லாம் பெற்று அவ்விருதுகளின் முத்தாப்பாய் தேசிய ரீதியாக கௌரவ பிரதமர் அவர்களால் வழங்கி கௌரவிப்படும் கலாபூசண விருதையும், பெற்ற தகைமையாளன் என்பது எம் மாவட்டத்திற்கும், கலைத்துறைக்கும் கிடைத்த கௌரவமாகும்.

கலைஞனாய், நல்ல பண்பாளனாய், உயரிய ஆசானாய், கலைத்துறைத் தோழனாய், என்னோடு என் கலைத்துறை பணியோடு உடன் வந்த இப்பெருமகனாரின் இழப்பு கரைச்சி பிரதேசத்திற்கு மட்டுமல்லாது கலைத்துறையை நேசிக்கும் அனைத்துத் தரப்பினருக்கும் பேரிழப்பாய் அமைந்துவிட்டது.

எனினும், கலைவாழ, தன் வாழ்வை அர்ப்பணித்த அமரர் அப்பச்சி வல்லிபுரம் அவர்கள் "கலையின்பமே நிலையின்பம்" எனும் வாக்கிற்கிணங்க பிறப்பில்லா பெருவாழ்வு பெறுவாராக!

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.**

**பிரதேச செயலாளர்**
**பிரதேச செயலகம்**
**கரைச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி

**1.அறம் செய விரும்பு**

நீ தருமத்தை(கடமையை)ச் செய்ய ஆவல் கொள்.

**2. ஆறுவது சினம்**

கோபம் தணிக்கப்பட வேண்டியதாகும்.

**3. இயல்வது கரவேல்**

உன்னால் கொடுக்கக்கூடிய பொருளை யாசிப்பவர்க்கு ஒளிக்காது கொடு.

**4. ஈவது விலக்கேல்**

ஒருவர் மற்றவர்க்கு கொடுப்பதை. வேண்டாமென்று தடுக்காதே.

**5.உடையது விளம்பேல்**

உன்னிடத்திலுள்ள பொருளை அல்லது இரகசியங்களை பிறர் அறியுமாறு சொல்லாதே.

**6. ஊக்கமது கைவிடேல்**

எப்போதும் முயற்சியைக் கைவிடக்கூடாது.

**7. எண் எழுத்து இகழேல்**

கணித. இலக்கண நூல்களைத் தினமும் தவறாமல் நன்கு கற்க வேண்டும்.

**8. ஏற்பது இகழ்ச்சி**

இரந்து வாழ்வது இழிவானது. அதனால் யாசிக்கக் கூடாது.

**9. ஐயம் இட்டு உண்**

யாசிப்பவர்கட்கு பிச்சையிட்டுப் பிறகு உண்ண வேண்டும்.


**10. ஒப்புரவு ஒழுகு**

உலக நடையை அறிந்துகொண்டு. அத்தோடு பொருந்துமாறு நடந்துகொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்ப் பதாதைகள் பிரசுரித்தவர்கள்



- பேரப்பிள்ளை
- தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு
  கணேசபுரம் வட்டாரம்
- ஆலய நிர்வாகத்தினர்
- திருநகர் விளையாட்டுக்கழகம்
- ஏசியா மொபைல்ஸ்
  பழைய கச்சேரி வீதி, கிளிநொச்சி.
- கமல் தர்சி குடும்பத்தினர்
- யோகண்ணா குடும்பத்தினர்

## பொது அறிவுத் தகவல்கள்

| | | |
|---|---|---|
| கணனியைக் கண்டு பிடித்தவர் | - | சாள்ஸ் பபேஜ் |
| நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு | - | நோர்வே |
| தொலைபேசியைக் கண்டு பிடித்தவர் | - | கிரகம்பெல் |
| உலகிலே மிக நீளமான குகை | - | மாமத்குகை |
| உலகிலே மிக ஆழமான ஏரி | - | பைக்கால் ஏரி |
| உலகிலே மிக அகலமான நதி | - | அமேசன் |
| நாக்கில்லாத உயிரினம் | - | முதலை |
| சிரிக்கத் தெரிந்த விலங்கு | - | மனிதன் |
| மிகச்சிறிய முட்டையிடும் பறவை எது | - | தேன்சிட்டு |
| மிகச்சிறிய இதயம் கொண்ட விலங்கு | - | சிங்கம் |
| நான்கு கண்களுடைய விலங்கு | - | முதலை |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

♦ வல்லிபுரம் + ♦ பரமேஸ்வரி

- பிறேம்குமார் + ஞானம்
  - பி.யோவேல்
  - பி.ஜெகூடன்
  - பி.அட்சயா
- கலைச்செல்வி + ரவீந்திரன்
  - விபிஷானந்தன்
    - ஆர்த்தி
    - சஞ்ஜனா
  - பபிஷாயினி
    - ஜீவிதன்
  - விதுர்சன்
- கலைவாணி + கதிர்காமலிங்கம்
  - கிஹோர்
  - ஜெனித்தா
    - நிலக்சன்
  - அனுஜன்
- கலைவாணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"**

எமது அன்பு அப்பா **திரு.அப்பச்சி வல்லிபுரம் அவர்களின்** இழப்பில் எமக்குத் துணைநின்று எம்மைத்தாங்கிய உங்கள் அனைவருக்கும் நன்றிகள். அப்பாவின் இறுதிக்கிரியைகளை நடாத்துவதற்கு இறுதிவரை துணைநின்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், மலர்மாலை மலர்வளையம், அஞ்சலி பதாதைகள், கண்ணீர் அஞ்சலி பிரதிகள் வழங்கியவர்களுக்கும் அப்பா நிரந்தரமாக உறங்கிய வேளை தேவார திருமுறைகளை பாடி துணைநின்றவர்களுக்கும் தொலைபேசி ஊடாகவும், கடிதம் மூலமாகவும் ஆறுதல் தெரிவித்த உங்களுக்கும் இதயபூர்வமான நன்றிகள்.

**" காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"**

**இங்ஙனம்
குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உம்புகழ் பூவுலகம்
# வாழும் காலம் வரை அப்பா

வடிக்கின்ற வரிகளுக்கு கண்கள் இல்லை.
இருந்தாயின் கிறுக்குகின்ற
கடதாசி கண்ணீரில் ஊறிவிடும்
தாயே! உம் வயிற்றில் சுமந்தாய்
காலமெல்லாம் சுமந்தாய் உம் நெஞ்சினில் ..
வலிகள் எம்மைத்தாக்கினால்
வலிப்பதென்னவோ உமக்கல்லவா..

வாழும் வகையறிந்து வாழ்ந்தபெரு வள்ளல்
ஆளும் குரல்வளத்தால் பேரெடுத்த கலைஞன்
நாளும் சமூகத்திற் சேவை செய்யும் தொண்டன்
நாடறிந்த வகையினிலே நல்லதொரு மனிதன்
சிந்துநடைக் கூத்தைக் காத்திட்ட பிரம்மா
காத்தான் வல்லிபுரமென உலகறிந்த மனிதர்
முத்துமாரி புகழ்பாடும் அம்மனின் பக்தன்
காலத்தால் மறையாத காவிய நாயகன்.
அனுதினமும் போற்றப்படவேண்டும்
உம் புகழ் பூவுலகம் வாழும்
காலம் வரை...! அப்பா...
என்றும் அன்புடன்
குடும்பத்தினர்



வேழன் பதிப்பகம், கிளிநொச்சி .021 228 5579

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org